2022-23-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்) (பக்கங்களின் எண்ணிக்கை : 2)

SUBJECT CODE 22 UTM 204

REG.NO:

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : மே – 2023

பி.ஏ. தமிழ் இலக்கியம் மதிப்பெண்கள் : 50

இரண்டாம் பருவம் நேரம் : 3 மணி

## பகுதி – III

### சிற்றிலக்கியம்

### பகுதி – அ (10 x 1 = 10 மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (K1)**

1. எந்த நகரில் மேகங்கள் ஏழரை நாழிகை பொன் மழைப் பொழிந்தன?

   அ) மதுரை ஆ) காஞ்சி இ) தஞ்சை ஈ) வஞ்சி

2. 'பரம வீட்டத்தான்' எனக் குமரகுருபரரால் குறிப்பிடப்படும் கடவுள் யார்?

   அ) திருமால் ஆ) நான்முகன் இ) இந்திரன் ஈ) முருகன்

3. 'ஆதியுலா' என்று அழைக்கப்படும் நூல் எது?

   அ) திருப்பேரூர் உலா ஆ) மூவர் உலா

   இ) திருவாரூர் உலா ஈ) திருக்கையிலாய ஞான உலா

4. இராமன் சேனைக்கு உணவாகப் போன நெல்லாகப் பள்ளன் கூறுவது எது?

   அ) பெருவெள்ளைச் சம்பா ஆ) மறுவில்லிச் சம்பா

   இ) நீலச்சம்பா ஈ) வில்லூன்றிச் சம்பா

5. மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமான் என காரைக்காலம்மையார் யாரைக் குறிப்பிடுகிறார்?

   அ) சிவபெருமான் ஆ) முருகன் இ) வருணன் ஈ) திருமால்

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக. (K2)**

6. பேய்கள் நகம் நீக்கவும் எண்ணெய் தேய்க்கவும் பயன்பட்டன யாவை?
7. தென்னர், அம்பொன்மலை மன்னர் யாவர்?
8. நந்தி மன்னன் தனது யானைப் படையால் எந்தக் கோட்டையை வென்றான்?
9. மூத்த பள்ளியின் நாடு எது?
10. அரசர்க்குரிய நால்வகை சூழ்ச்சிகளாகக் குமரேச சதகம் குறிப்பிடுவன யாவை?

(த.பி.பா)

## பகுதி – ஆ (5 x 3 = 15 மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K3)**

11. அ) காளியிடம் பேய்கள் உரைத்த முறையீட்டை எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ) குலோத்துங்கனின் நால்வகைப் படைகளின் புறப்பாடு குறித்து காளியிடம் கூளி கூறியன யாவை?

12. அ) மீனாட்சியைக் காக்குமாறு குமரகுருபரர் திருமாலை வேண்டும் திறத்தைப் புலப்படுத்துக.

(அல்லது)

ஆ) தமிழைக் குழந்தையாகப் பாவித்து தமிழ்விடு தூது ஆசிரியர் மொழிவன யாவை?

13. அ) சிவபெருமான் கோலங்கொண்ட தன்மையைச் சேரமான் பெருமாள் எங்ஙனம் சுட்டியுள்ளார்?

(அல்லது)

ஆ) நந்திக் கலம்பகத் தலைவி குருகிடம் உரைத்த தூது மொழிகளைப் புலப்படுத்துக.

14. அ) சிங்கன் தன் வலிமையாகக் கூறியனவற்றை எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ) பண்ணைக்காரனிடம் மூத்தபள்ளி முறையிட்ட செய்திகளைக் குறிப்பிடுக.

15. அ) காரைக்கலாம்மையாரின் பக்தித் திறத்தை அற்புதத்திருந்தாதி வழிப் புலப்படுத்துக.

(அல்லது)

ஆ) குணம் மாறாதனவாக குமரேச சதகம் கூறுவனவற்றைப் பட்டியலிடுக.

## பகுதி – இ ( 5 x 5 = 25 மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K4 & K5)**

16. அ) களம் பாடியது வாயிலாக அறியலாகும் போர்க்களக் காட்சிகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

ஆ) பேய்கள் காளிக்குக் கூழட்டுப் படைத்ததை விவரிக்க.

17. அ) குமரகுருபரர் நிலவை மீனாட்சியம்மையுடன் ஒப்புமைப்படுத்திக் கூறியதை விளக்குக.

(அல்லது)

ஆ) தமிழைச் சக்கரவர்த்தியாகத் தமிழ்விடுதூது ஆசிரியர் போற்றியதை விவரிக்க.

18. அ) சிவபெருமானின் உலா வரும் காட்சியைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

ஆ) நந்திவர்மனின் வீரச் சிறப்பை விளக்கி வரைக.

19. அ) சிங்கன், சிங்கியைத் தேடிக் காணாமல் வருந்திப் புலம்பியதை விவரிக்க.

(அல்லது)

ஆ) மழை வெள்ளம் ஐவகை நிலங்களில் பாய்ந்த காட்சியை விளக்குக.

20. அ) அற்புதத்திருவந்தாதி வழி வெளிப்படும் இறையியல்புகளை மதிப்பிடுக.

(அல்லது)

ஆ) நால்வருணத்தார்க்குரிய இயல்புகளைக் குமரேச சதகம் வழி ஆய்ந்துரைக்க.

**Ethical Paper**

-------------------------------